1981 மார்ச் 2]

இடையூறாக இருக்கிறது, சுகாதார வசதிக்கு இடையூறாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து உடனடியாக அது குறித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போட்டால் ஆராய்ந்து சொல்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: என்னுடைய கேள்வி ஆதரைஸ்டு பற்றியது, அமைச்சர் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை, அன் ஆதரைஸ்டு என்று சொன்னார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகு விளக்கம் வேண்டாம்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியப் பகுதிகள் இல்லாத இடங்களில் நகரங்களில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்காக குடிசை மாற்று வாரியம் இல்லையென்றால் நகராட்சிகள் மூலமாக நடவடிக்கைகள் எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பொதுவாக சுகாதாரத்தைக் கவனிப்பது உள்ளாட்சித் துறை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து உதவி என்பது பற்றி கேள்வி இருக்கிறது, அதைப் பற்றி ஒருவரும் கேட்கவில்லை.

குறைந்த அளவு ஊதியச் சட்டம்.

*வினா எண் 332— திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குறைந்த பட்ச கூலி சட்டம் தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் அமுலில் இருக்கிறது ?

(ஆ) இல்லையெனில், காரணம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) : குறைந்த அளவு ஊதியச் சட்டம் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் அமுலில் உள்ளது.

LEGISLATURE TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1981 மார்ச் 2

திரு. எல். இளையபெருமாள் : இந்தக் குறைந்தபட்சக் கூலித் திட்டம் சம்பந்தமாக கடந்த 10 மாத காலமாக பல தடவைகள் எடுத்துச் சொல்லியுங்கூட அதை அமுல் நடத்துவதற்காக தனி அதிகாரிகளோ அல்லது அலுவலக வசதிகளோ செய்யாமல் இருக்கிறார்கள், அதை உடனடியாகச் செய்வார்களா என்பதை அறிய விரும்புவதோடு காட்டுமன்னார் கோவிலில் ஒரு முதலாளி அப்படிக் கொடுக்காதது நியாயமற்றது என்று சொல்லி அவர் மீது நடவடிக்கை என்று சொல்லியும் அந்தத் தாசில்தார் இதுவரையிலே $1\frac{1}{2}$ ஆண்டுக்காலமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஏன் நடவடிக்கைஎடுக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : குறைந்த பட்ச ஊதியம் விவசாயக் கூலிகளுக்கு மட்டும்தான் என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறார் என்று நினைக்கிறேன். யாருக்கு குறைந்த பட்ச ஊதியம் என்று சொல்கிறார் என்று தெரியவில்லை. கீழ்த் தஞ்சை மாவட்டத்திலே குறைந்த பட்ச கூலி இல்லை, அங்கே பேர் வேஜஸ், நியாயக் கூலி சட்டம் தான் அமுலில் இருக்கிறது. எதைச் சொல்கிறார்கள் என்று தெளிவாகச் சொன்னால் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : தென் ஆற்காடு மாவட்டத்திலே குறைந்த பட்ச கூலி விவசாயச் சட்டம் அமுலில் இருக்கிறது. அங்கே காட்டுமன்னார் கோவிலில் ஒரு முதலாளி அதைக் கொடுக்காதது நியாயம் அற்றது என்றும் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொல்லியும் அந்தத் தாசில்தார் நடவடிக்கை எடுக்கவில்லை. தென் ஆற்காடு மாவட்டத்திலே அதை அமுல்படுத்துவதற்காக தனி அதிகாரிகள் போடப்படவில்லை. அப்படி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அரசு தனிப்பட்ட அதிகாரிகளை அதற்காகப் போடாத காரணத்தினால் தான் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதால் இனிமேலாவது தனிப்பட்ட அதிகாரிகளைப் போடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு அங்கே நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் இப்போது புகார் சொல்லியிருக்கிறார். அந்தப் புகார் பற்றி அரசு விசாரணை செய்யும்.

1981 மார்ச் 2]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தக் குறைந்த பட்சக் கூலிச் சட்டம் தமிழகம் முழுவதும் அமுலில் இருக்கிறது என்பது உண்மை. இந்தச் சட்டம் அமலில் இருந்தால் போதாது. குறிப்பிட்ட தொழில்களிலே குறைந்த பட்ச கூலி நிர்ணயிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கப்படாத பல தொழில்கள் இருக்கின்றன. அவற்றிற்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட கால வரையறையை நிர்ணயித்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஒரு மாநிலம் பூராவும், ஏதாவது ஒரு தொழிலில் 1,000 தொழிலாளர்கள் இருப்பார்களானால் அவர்களுக்கும் அதற்கும் மேற்பட்டுள்ள தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற நியதியை வைத்துக்கொண்டு இருக்கிறோம் சட்டமும் அது தான். இந்த அரசு வந்த பிறகு எந்த எந்தத், தொழில்களுக்கு நிர்ணயித்து இருக்கிறோம், எவை எவைகளுக்கு நிர்ணயிக்க இருக்கிறோம், எவையெவைகளை புதிதாக அட்டவணையில் சேர்த்து இருக் கிறோம், எந்த எந்தத் தொழில் களைச் சேர்க்க இருக்கிறோம் என்பதைப் பற்றியெல்லாம் சென்சூர்மோஷன் வந்தபோது விரிவாகச் சொல்லியிருக்கிறேன். மேலும் அந்தத் தகவல் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லவில்லை. அவர்கள் சொல்கிறபோது புகார் என்று சொன்னார்கள் . அமைச்சர் தனி அதிகாரியை ஏன் நியமிக்கவில்லை என்று கேட்டேன். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படித்தான் பதில் சொல்ல வேண்டுமென்று அமைச்சரை வற்புறுத்த முடியாது.

டாக்டர் மு. கருணாநிதி : கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு, புகார் இவைகள் எல்லாம் இடம் பெறக் கூடாது என்பது இந்த அவையினுடைய விதி. மாண்புமிகு உறுப்பினர் திரு. இளைய பெருமாள் கேட்ட கேள்வி புகார் என்று அமைச்சர் சொல்லி இருப்பது அவைக் குறிப்பிலே இடம் பெறலாமா ?

[முற்பகல் 10–10]

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் சொன்னதைப்போல நான் புகார் சொல்லவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்ட கேள்வியில் அலுவலகம் அமைக்கவில்லை. அதிகாரிகள் அமைக்கவில்லை என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறு என்ற முறையில் தான் உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்களே தவிர, புகார் அல்ல. அது நிவர்த்தி செய்யக்கூடிய ஒன்றுதான்.

Thiru L. ELAYAPERUMAL : My question has not been replied to by the Hon Minister That is my point. Why it was not implemented and why was not the officer appointed?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடுத்த தகவலின்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, தகவல் என்பது அல்ல, ஏன் அதிகாரிகள் அமைக்கப்படவில்லை என்பது தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிகாரிகளை அமர்த்துவதும் நடவடிக்கைதான். அமைச்சரவர்கள் அதைத்தான் சொன்னார்கள். தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் அதிகாரிகள் அமர்த்தப்படுவது வரையில் நடவடிக்கைதான்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்சக் கூலிச் சட்டம் தமிழ்நாடு முழுவதும் அமுலில் இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, ஈரோடு, போன்ற பகுதிகளில் உள்ள போக்குவரத்து நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்திருக்கும் குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அமுல் நடத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தெரியாது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, ஹோட்டலில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வெறும் சாப்பாடு மட்டும் போடுகிறார்கள் ; ஜவுளிக் கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வெறும் துணியை மட்டும் கொடுத்து அவர்கள் அந்தத் துணியை விற்றுப் பணத்தை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதேபோல பலசரக்குக் கடைகளிலும் நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்வதற்கு ஒரு சட்டம் இயற்றுவதற்கான உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 2]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன இரண்டு தொழில்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. Sh ps and Establishment Act—கடைகள், நிறுவனங்களில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அண்மையில் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயித்து அவர்களெல்லாம் மெத்த மகிழ்ச்சியோடு இந்த அரசைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்சக் கூலியை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது குறைந்தபட்சக் கூலியை மாற்றியமைக்க வேண்டுமென்று சட்டத்திலே இருந்தாலும் இரண்டு, இரண்டரை ஆண்டுகள் ஆனபிறகு மாற்றியமைப்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று டெல்லியில் கூடிய தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் முடிவெடுத்ததற்கேற்ப இந்த அரசும் செயல்படும்.

திரு. டி. மணி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பல தொழில்களுக்குக் குறைந்தபட்சக் கூலி இருப்பதாகக் கூறினார்கள். தமிழகத்தில் சுமார் 180 முந்திரி ஆலைகளில் முக்கால் இலட்சம் தொழிலாளர்கள் இருபத்தைந்தாண்டு காலமாகப் பணி புரிந்து வருகிறார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேள்வி குறைந்த பட்ச கூலிச் சட்டம் தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் அமுலில் இருக்கிறது என்பதாகும். எந்தெந்த டிரேட்களில் அமுலில் இருக்கிறது என்று கேள்வி இல்லை.

திரு கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குறைந்தபட்சக் கூலிச் சட்டம் எங்களுடைய பகுதியைப் பொறுத்த வரையில் எந்தவொரு அமைப்பிலும் செயல்படவில்லை. குறிப்பாக அங்குள்ள ஏலக்காய் சுத்தம் செய்யும் தொழில், இலவம் பஞ்சு சுத்தம் செய்யும் தொழில் ஆகியவைகளில் பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஏறக்குறைய 50,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கடைசி நேரத்தில்

அவர்கள் சுவாசிக்கின்ற காற்றினால் டி.பி. நோய் ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காவேரிப்பாக்கம் ஏரியினைத் தூர் எடுத்தல்.

*வினா எண். 333—திரு. சி. கோபால் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தூர்ந்துவரும் காவேரிப்பாக்கம் ஏரியினால் விவசாயம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஏரியை தூர் எடுக்கும் திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) காவேரிப்பாக்கம் ஏரியில் தற்சமயம் 13 அடி ஆழத்திற்கு மண் தூர்ந்து உள்ளதால் ஏரியின் முழு அளவிற்குந் தண்ணீர் தேக்க இயலவில்லை. எனவே, இவ்வேரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாசனப் பரப்பு முழுமையாக பாசனம் பெற முடியவில்லை.

(ஆ) இந்த ஏரியின் முழு மட்ட நீர் அளவை ஆறு அங்குலம் உயர்த்தி ஏரியின் இழந்த கொள்ளளவை ஈடு செய்ய ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு தல் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே காவேரிப்பாக்கம் ஏரி மிகப் பெரிய ஏரியாகும். தற்பொழுது வட ஆற்காடு மாவட்டத்திலே வறட்சி நிலைமை பரவிக் கொண்டிருக்கிறது. இந்தக் காவேரிப்பாக்கம் ஏரியின் கீழே ஏறக்குறைய 16,000 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கும் கூலி விவசாயப் பெருமக்கள் ஏற்கெனவே நிலவும் வறட்சி நிலை காரணமாக, கிராமங்களைவிட்டு நகரங்களுக்கு நகரும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்பொழுது நிலவுகின்ற வறட்சி நிலையைக் கருத்திலே கொண்டு தூர் வாருகின்ற பணி, மற்றும் கரையை உயர்த்து